



தூத்துக்குடியில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதை முன்னிட்டு 2வது நாளாக, தூத்துக்குடி மாநகரம் திரேஸ்புரம் பகுதி 8வது வார்டுக்கு உட்பட்ட முத்தரையர் நகர், மாதவ நாயர் காலனி 16 வது வார்டு P&T காலனி 14 வது தெரு, கோக்கூர் உள்ளிட்ட இடங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழை நீரை வெளியேற்ற சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பெ.கீதாஜீவன் உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், மாமன்ற உறுப்பினர் பவானி, வட்ட செயலாளர் ரவிச்சந்திரன், வட்ட பிரதிநிதிகள் மார்ஷல், ஆறுமுகம், திமுக சிறுபான்மையினர் அணி நிர்வாகி நிக்கோலஸ் மணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.





கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நல உதவிகளை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, அசரப் அலி, வெங்கடேஷ், முகமது யூனிஸ், வழக்கறிஞர் முனுசாமி பிரதீப், சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சாவூர் அக்.22-*

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை (23.10.2025 - வியாழக்கிழமை) காலை 10:00 மணியளவில் கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள்:

1.வரும் 28.10.2025 செவ்வாய்க்கிழமை, மாமல்லபுரம், ஈ.சி.ஆர். சாலையில் உள்ள "கான்ஃப்ளூயன்ஸ் ஹால்" (Confluence Hall)ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து.

2. துணை முதல மைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா.

3. SIR (Special Intensive Revision) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு வர உள்ளதால் இல்லம் தோறும் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.

4. கழக ஆக்கப் பணிகள்.

குறிப்பு: ஒன்றிய பகுதி பேரூர் கழக செயலாளர் கூட்டத்திற்கு வரும்போது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவம் மற்றும் BLA2 & BLC புத்தகத்தை மாவட்ட கழகத்தின் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் – பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் மற்றும் பேரூர் தி.மு.க சார்பில்

# 'ஓரணியில் தமிழ்நாடு' வெற்றி பெற உழைத்திட்ட நிர்வாகிகளுக்கு பரிசு!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கைக் கடிகாரங்கள் வழங்கினார்!

*திருவள்ளூர், அக். 22-*

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காப்பாற்றிட தமிழ்நாட்டு மக்கள் ஓர் அணியில் திரள வேண்டுமென்ற, ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் மற்றும் பள்ளிப்பட்டு பேரூரில் உறுப்பினர்களை சேர்க்க, சிறப்பாக செயல்பட்ட 200 நபர்களுக்கு பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் கைகடிகாரம் வழங்கும் நிகழ்ச்சி பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் அலுவலகத்தில் நடைபெற்றது இதில் பேரூர் கழகச் செயலாளர் சி.ஜெ.செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றனர்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு சிறப்பாக செயல்பட்ட கழக நிர்வாகிகளுக்கு கழகத் தலைவர் அவர்களின் உருவம் பொறித்த கை கடிகாரம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்

இதில் ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.மணிமேகலை, மாவட்ட பிரதிநிதிகள் டி.செங்கய்யா, ஜி.ஆறுமுகம், ஒன்றிய பொருளாளர் எஸ்.பி.ஐயப்பன், ஒன்றிய துணை செயலாளர் கே.ஆஞ்சநேயன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், கொல்லாலகுப்பம் ஜெ.தண்டபாணி, ஈச்சபாடி த.ஜெகதீசன், எ.கே. ரவி, பி.வெங்கட் பெருமாள், ஜெ.சுபான், கமலநாதன், ஆர்.முரளி, கேசவன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஏ.கலீல், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் சதீஷ் (எ) ஜெகதீஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என்.சந்திரபாபு, கே. திவாகர், சதாம் உசேன், பேரூர் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தி.திருமால், ஆ.மயில்வாசன், ஜே.சூர்யா, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் எம்.பாபு எம்.பி.ரவி ணகருணாமூர்த்தி தாமோதரன் பி.சரவணன் முனியய்யா, ராஜேந்திரன், எஸ் சிலம்பரசன், விமலா, குமார் மாதவன் யசோதா டி.ரபி, பி.லோகேஷ், பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் லட்சுமி ஹரி பாபு, கே.பானு, புல்லட் குமார், எம்.ராஜேஷ், பி.சுரேஷ், எஸ்.ரவிக்குமார், ஏ.பால்பா ண்டி, சி.செந்தில், பிரதீப், முஹம்மது அலி , எஸ்.மோகன்ராஜ், அல்லி, முத்து, சூரியன் , ஏ.ராஜேஷ், பாக முகவர்கள் என்.கமாஷேன், எஸ். வெங்கடேசன், கோபி , நாகூர் , சேகர், பி.குமார், ராகவன் , குமார் , சி.வெங்கடேசன், சேகர், நடராஜ், குமார் , புஷ்பலதா வி.என். ஜெகதீசன், கே.ரவி, ஏழுமலை, சபீர் ரஃபி , பேரூர் கிளை வார்டு செயலாளர்கள் வி.சிரஞ்சீவி, கே.முரளி, எஸ்.மோகன்ராஜ் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரணி பேரூரில் 500 பேருக்கு நல உதவிகள்!

*திருவள்ளூர், அக். 22 -*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் - பொன்னேரி தொகுதி ஆரணி பேரூராட்சியில் மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆகியோரது ஆலோசனைப்படி, கழகத்தினர் - பொதுமக்கள் 500 பேருக்கு விழாக்கால பரிசுத் தொகை, இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று 19.10.2025 மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ்பொன்னையன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் ஆரணி பேரூர் செயலாளர் பி. முத்து முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆரணி பேரூரை சார்ந்த கழகத்தி னர் - பொதுமக்கள் 500 பேருக்கு இனிப்பு, விழாக் கால பரிசுத் தொகை வழங்கினார்

இதில் பேரூர் நிர்வாகிகள் கரிகாலன், நீலகண்டன், ஜெயக்குமார், பிரபு, பிரபாகரன், சுல்தான், நாகராஜ், பாஸ்கர், சாலேக், முரளி, சாய் சத்யம், ஈஷா ஜாவித்,சூர்யா, ஜி பாஸ்கர், ராஜா, மாடசாமி மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முகாமில் கலந்து கொண்டனர்.

### பெரம்பூர் நெடுஞ்சாலை, ராஜீவ் காந்தி பூங்கா அருகில்

# ரூ.34.90 இலட்சம் மதிப்பில் பல்நோக்கு மையக் கட்டடம்!

## அமைச்சர் பி.கே. சேகர் பாபு திறந்து வைத்தார்!

*சென்னை,அக்.22-*

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு (18.10.2025) அன்று , மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.34.90 இலட்சம் மதிப்பில் வி.க.நகர் மண்டலம், வார்டு71, பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கில் ராஜீவ் காந்தி பூங்கா அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, குழந்தைகள் மையத்தின் செயல்பாட்டினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் நிதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கும், கல்விக்கும், மழலைச் செல்வங்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த குழந்தைகள் மையங்களுக்கும் பெருமளவிற்கு மக்கள் பயன்பாட்டிற்கு இந்த நிதிகள் பயன்படுத்தப்பட்டு, இன்று இந்த குழந்தைகள் மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டு, இங்குள்ள குழந்தைகளுக்கு தேவையான பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் குத்தம்பாக்கம் பேருந்து முனையம் முடிவுறும் நிலையில் உள்ளது. மாமல்லபுரத்தில் கட்டப்படும் பேருந்து நிலையம் மற்றும் செங்கல்பட்டில் ரூ.200 கோடி மதிப்பில் மிகப் பிரம்மாண்டமாக ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த பேருந்து நிலையம் தைத்திங்களில் பயன்பாட்டிற்குக் கொண்டு வர தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதுமட்டுமில்லாமல் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.200 கோடி மதிப்பில் 13 MTC பேருந்து நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதில் அம்பத்தூர், முல்லை நகர், உதயசூரியன் நகர் ஆகிய 3 பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு, இந்த மாத (அக்டோபர்) இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்கள். இதில் அம்பத்தூர் பேருந்து நிலையம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது புனரமைக்கப்பட்ட பேருந்து நிலையம் ஆகும். கிட்டத்தட்ட 55 ஆண்டுகளுக்கு பிறகு இந்த இடத்தில் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேயர் திருமதி. ஆர்.பிரியா, வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி. சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.புனிதவதி எத்திராஜன், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

### மக்கள் நலத்திட்டங்களை வகுத்து, சாதனைகள் படைத்து

# தமிழ்நாட்டை நிதி மேலாண்மையில் முதன்மை மாநிலமாக வழிநடத்துகிறார் முதல்வர்!

## சட்டப்பேரவையில் – டாக்டர் நா.எழிலன் பேச்சு!

*சென்னை, அக்.22-*

சட்டப்பேரவையில் டாக்டர் நா.எழிலன் பேசியதாவது:-

ஜனநாயகத்திற்கு ஒரு பேரிடி. மாநில சுயாட்சிக்கு, மாநில உரிமைக்கு ஒரு பேரிடி.

Rajamannar Committee ஆக இருக்கட்டும், Punchhi Commission ஆக இருக்கட்டும், தொடர்ச்சியாக ஆளுநருடைய வரையறையை பல்வேறு Union, மாநில அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் உள்ள உறவுகள் குறித்து தங்களுடைய கருத்தைப் பதிவு செய்துள்ளார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள்தான் அந்த Commissionல் ஆளுநர் பதவி எதற்கு என்று ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார்கள்.

ஜனநாயக மாண்பு என்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளினுடைய சட்டமுன்வடிவுகளை 'in consultation with and aid of the Council of Ministers' என்று அரசியலமைப்பு சட்டத்தில் தெளிவாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எழுதியுள்ளார். இங்கே 'in consultation with the Council of Ministers' என்பதற்கு பதிலாக 'in consultation with extra constitutional resources' அதாவது, அரசியலமைப்பு சட்டத்தில் இல்லாத வேறொரு adviceன் அடிப்படையில் தான் ஆளுநர் அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்று தெள்ளத்தெளிவாக தெரிகிறது. Fiscal Responsibility and Budget Management Act பற்றி நமக்கு



அறிவுரை கூறும் ஆளுநர் அவர்கள் ஒன்றிய அரசைப் பார்த்து கேட்க வேண்டும். அவர்கள் Fiscal Responsibility and Budget Management Act அடிப்படையில்தான் இந்த நாட்டை ஆள்கின்றார்களா? நிதி பற்றாக்குறை, கடன் சுமை ஒன்றிய அரசுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறது?

நாம் மக்கள் நலத் திட்டங்களை வகுத்து, மக்களாட்சி முறையைக் கொடுத்து, சாதனைகள் செய்து, நிதி மேலாண்மையை No.1 State ஆக தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அதைப் பொறுத்துக் கொள்ளாத ஆளுநர் அவர்கள் இது போன்ற நிருவாகத்த ன்மையைக் கொண்டு, extra discretionary powers, extra constitutional powers என்பது அவர் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக செயல்படுகிறார்.

இந்த முடிவை நாம் மக்கள் மன்றத்தில் விவாதம் செய்துகொண்டிருக்கிறோம். இதன் சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக சொல்வார். ஆளுநர் பதவி எதற்கு என்று கேட்டால், 'ஆட்டுக்கு எதற்கு தாடி' என்று பதிவு செய்துள்ளார்.

அதனடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆளுநர் நடவடிக்கையை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக வன்மையாக கண்டிக்கிறோம். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் எடுக்கிற அனைத்து முடிவுகளுக்கும் நாங்கள் உடன்படுவோம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்தான ஆலோசனை கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் அன்புராஜன், உள்ளிட்ட தீயணைப்புத் துறையினர், பொதுப் பணித்துறையினர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.